# ***கிண்ணியா மத்திய கல்லூரி***

## ***பொன் விழா – எம் விழா***

கிண்ணியா மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) தனது பொன்விழா ஆண்டில் காலடி வைத்துள்ளது. 50 ஆண்டு கால பாடசாலை வரலாறு என்பது வெறும் ஆண்டுகளின் கணக்குப் பெருக்கல் அல்ல. கிண்ணியா வரலாற்றின் ஒரு பகுதியாகும்.

எமது வரலாற்று நிகழ்வுகளை மீள் நிறுத்திப் பார்க்கவும், பாடசாலைக்கும் சமூகத்திற்குமான இடைவெளியை குறைக்கவும், எமது மாணவர்கள் மத்தியில் மறைந்து கிடக்கும் புத்தாக்க ஆர்வங்களை உற்சாகப்படுத்தி அவர்களை சமூகத்திற்கு அறிமுகப்படுத்தவும், எமது மண்ணின் புகழை ஒரு படியாவது உயர்த்தியவர்களை ஞாபகப்படுத்தவும் வேண்டியது எமது கடமையல்லவா?

இந்த கடமைகளை நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பம் இப்போது உங்கள் முன் வந்து நிற்கின்றது. இன்னும் ஐம்பது ஆண்டுகளில் எம்மில் எத்தனை பேர் இருக்கப் போகின்றோம் என்பதை நாம் யாராவது சொல்ல முடியுமா?

எனவேதான் இந்தப் பொன்விழாவை உயரிய தருணமாக நாம் பயன்படுத்த வேண்டியுள்ளது. இவ்விழாவில் எமது பிரதேச மக்கள் அனைவரினதும் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும். இப்பங்களிப்பு என்பது பல்வேறு வகைக்குட்பட்டதாகும். எனவே தங்களின் பங்களிப்பு என்ன என்பதை நீங்கள் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

***பொன் விழா – எம் விழா***

- பொன்விழாக் குழு-
கிண்ணியா மத்திய கல்லூரி.